

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.6.2025) சேலத்தில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. ராஜேந்திரன், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தா தேவி உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.6.2025) சேலத்தில் நடைபெற்ற அரசு விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்களை வழங்கினார். இந்நிகழ்வின்போது, சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. ராஜேந்திரன், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தா தேவி உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நார்வே மற்றும் ஆர்மேனியா நாடுகளில் நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டிகளில் முன்னணி இடங்களை வென்ற தமிழ்நாடு செஸ் வீரர்கள் டி.குகேஷ், அரவிந்த் சிதம்பரம், ர.பிரக்ஞானந்தா ஆகியோருக்கு நேற்று (12.6.2025) வாழ்த்துத் தெரிவித்தார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.



எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார் அவர்களின் மகன் வி.கிருஷ்ணகுமார் – லோ.கோ.சரண்யா இணையரின் திருமண வரவேற்பு விழாவில் கழக இளைஞரணிச் செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

### அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி – 'நான் முதல்வன்' திட்டத்தில் பயின்று

# இந்திய குடிமைப்பணி முதனிலைத் தேர்வில் தமிழ்நாட்டு மாணவர்கள் சாதனை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஜூன். 13-**

**அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி மற்றும் "நான் முதல்வன்" திட்டத்தில் பயின்று இந்திய குடிமைப் பணி முதனிலைத் தேர்வில் தமிழ்நாடு மாணவர்கள் சாதனை படைத்துள்ளது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

தமிழ்நாடு அரசின் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியிலும் "நான் முதல்வன்" திட்டத்திலும் பயின்ற நம் மாணவர்கள் UPSC முதனிலைத் தேர்வு முடிவுகளில் இதுவரை இல்லாத எண்ணிக்கையில் சாதனை படைத்துள்ளனர்!

முதன்மைத் தேர்வு, நேர்முகத் தேர்விலும் அடுத்து நீங்கள் முத்திரை பதிக்க வாழ்த்துகிறேன். உங்கள் வெற்றிமுகங்களை நேரில் காண ஆவலாய் இருக்கிறேன்.

இந்தச் சாதனைக்கு உறுதுணையாக இருந்த அதிகாரிகளுக்கும் பயிற்றுநர்களுக்கும் என் பாராட்டுகளை உரித்தாக்குகிறேன்! தமிழ்க்கொடி உயர உயரப் பறக்கட்டும்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்தினார்!

# எழும்பூர் ஜெ.விஜயகுமார் இல்லத் திருமண வரவேற்பு விழா!

## ஆ.ராசா-ஆர்.எஸ்.பாரதி-பி.கே.சேகர்பாபு-தயாநிதி மாறன்-டி.கே.எஸ்.இளங்கோவன்-இ.பரந்தாமன் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 13 -

எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார் அவர்களின் மகன் வி.கிருஷ்ண குமார்லோ.கோ.சரண்யா இணையரின் திருமண வரவேற்பு விழாவில் கழக இளைஞரணிச் செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

இவ்வரவேற்பு விழாவிற்கு சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமை தாங்கினார்.

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் முன்னிலை வகித்தார்.

நீலகிரி மக்களவைத் தொகுதி உறுப்பினரும் கழகத் துணை பொதுச் செயலாளருமான ஆ.ராசா, கழக அமைப்புச் செயலாளர் ஆலந்தூர் ஆல்.எஸ். பாரதி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும் கழக விளையாட்டு அணி மேம்பாட்டு அணி செயலாளருமான தயாநிதி மாறன், கழக வெளியீட்டுக் குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கழக அமைப்பு துணை செயலாளர் தாயகம் கவி, எம்.எல்.ஏ., வடசென்னை மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பா.ரங்கநாதன், மாவட்ட அவைத் தலைவர் கோ.ஏகப்பன், அண்ணா நகர் தெற்கு பகுதிச் செயலாளர் ந.இராமசிங்கம், எழும்பூர் பகுதி கழகச் செயலாளர்கள் சொ.வேலு, வி.சுதாகர், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ந.துலுக்காணம், எழும்பூர் வட்டக் கழகச் செயலாளர்கள் வீ.விஜயகுமார், டி.தயாளன், ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், எல்.சுந்தர்ராஜன், வான்மதி கதிரவன், டால்பின் அரி, கொளத்தூர் பகுதி கழகச் செயலாளர் ஐ.சி.எஃப்.முரளி, அண்ணா நகர் பகுதி கழகச் செயலாளர் ச.பரமசிவம், திரு.வி.க. நகர் பகுதி கழகச் செயலாளர் தமிழ்வேந்தன்,

மாநிலப் பொறியாளர் அணி துணை அமைப்பாளர் வெ.உமா காந்தன், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் சே.பாலாஜி, முன்னாள் வட்டச் செயலாளர் ஆர்.புருசோத்தமன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், முன்னாள் பகுதிப் பொருளாளர் ந.கலையரசன், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதி கள் மு.கமலக்கண்ணன், மா.காந்தி; வட்டத் துணை செயலாளர் கே.சீனிவாசன், ந.இளஞ்செழியன், முன்னாள் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் விஜய போஸ், எழும்பூர் தெற்குப் பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர் ரா.வெற்றி வேல், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெ.சிலம்பரசன், எல்.சுகுமாரன்; 108 இளைஞர் அணி வட்ட அமைப்பாளர் பு.சதிஷ்குமார், முன்னாள் அவைத் தலைவர் கி.புஷ்பராஜ், எம்.இ.தேவநிதி, நேரு பிரபாகரன், விஜய தேவராஜ், வட்டத் துணைச் செயலாளர் ஆர்.ஆரோக்கியம், பாக முகவர் கவிதா, ஜெ.சரவணன் உள்ளிட்டு தலைமை, மாவட்ட மற்றும் பகுதி கழக நிர்வாகிகளும், செயல்வீரர்களும் கலந்து கொண்டனர்.

### நார்வே – ஆர்மேனியா நாடுகளில் நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டிகளில் வென்ற

# தமிழ்நாடு செஸ் வீரர்கள் டி.குகேஷ் - அரவிந்த் சிதம்பரம் - ர.பிரக்ஞானந்தாவுக்கு வாழ்த்து!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்!

சென்னை, ஜூன் 13 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நார்வே செஸ் போட்டியில் மூன்றாவது இடத்தை பிடித்த நடப்பு இளம் உலக சாம்பியனும், மேஜர் தயான் சந்த் கேல் ரத்னா விருது பெற்றவருமான டி.குகேஷ், ஸ்டீபன் அவாக்யன் நினைவு செஸ் போட்டியில் முதலிடம் பிடித்த அரவிந்த் சிதம்பரம் மற்றும் இரண்டாம் இடம் பிடித்த ர.பிரக்ஞானந்தா ஆகியோருக்கு நேற்று (12.6.2025) வாழ்த்துத் தெரிவித்தார்.

அரவிந்த் சிதம்பரம், ஸ்டீபன் அவாக்யன் நினைவு செஸ் போட்டியில் முதல் இடத்தை பிடித்ததன் மூலம் தற்போது FIDE உலக தரவரிசை பட்டியலில் முதல் 10தர இடங்களுக்குள் நுழைந்துள்ளார். அரவிந்த் சிதம்பரம் சென்னையில் கடந்த ஆண்டு SDAT யின் மூலம் நடத்தப்பட்ட சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் போட்டியில் மாஸ்டர் பிரிவில் முதலிடம் பிடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

டி.குகேஷ் மற்றும் ர.பிரக்ஞானந்தா இருவரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் தலை சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான Elite திட்டத்தின்கீழ் பயன் பெற்று வருகின்றனர்.

சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெற்ற விளையாட்டு வீரர்கள் தங்களை மேலும் தயார்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசின் எலைட் திட்டத்தின் கீழ் ஆண்டிற்கு 30.00 லட்சம் ரூபாய் வழங்கப்படுகின்றது, விளையாட்டு வீரர்கள் தங்களுக்கு தேவையான அதிநவீன உபகரணங்களை வாங்கி பயன்படுத்தவும், வெளிநாடுகளுக்கு சென்று சிறந்த பயிற்சியாளர்களிடம் பயிற்சி மேற்கொள்ளவும், தொடர்ந்து சர்வதேச விளையாட்டு போட்டிகளில் பங்கு பெற்று தங்களது திறமையை வெளிப்படுத்துவதற்காகவும் எலைட்திட்டத்தின்கீழ் நிதியுதவி அளிக்கப்படுகின்றது.

நார்வே செஸ் போட்டி, ஸ்டீபன் அவாக்யன் நினைவு செஸ் போட்டி ஆகியவற்றில் முன்னணி இடங்களை வென்றதன் மூலம் உலக டாப் 10 தரவரிசையில் இருக்கும் நான்கு இந்திய வீரர்களில் மூன்று பேர் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் என்பது விளையாட்டில் உலக அளவில் முன்னணி இடமாக தமிழ்நாட்டினை உருவாக்கி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முயற்சிகளுக்கு சிறப்பு சேர்ப்பதாக அமைந்துள்ளது.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாள் - மாபெரும் கருத்தரங்கம்!

## ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, ஜூன்.13-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் மாபெரும் கருத்தரங்க கூட்டம் தருமபுரி மேற்கு மாவட்டம், ஆரூர் என்.என். மஹாலில் (15.06.2025) அன்று காலை 10.00 மணிக்கு ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., தலைமையிலும், ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் மருதூர் ஏ.இராமலிங்கம், ஆதிதிராவிடர் நலக்குழு மாநில இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாநில துணை செயலாளர்கள் பி.துரைசாமி, கொடநாடு மு.பொன்தோஸ், மூ.பரமானந்தம், எஸ்.மாரியப்பன் கென்னடி, சி.தசரதன் மற்றும் தகடூர் கொ. ரமேஷ் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் கழக துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் ஆகியோர் கருத்தரங்கை துவக்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார்கள்.

இக்கருத்தரங்கு கூட்டத்தில் கழக மாணவர் அணி செயலாளர் இரா.இராஜிவ் காந்தி, ஆதிதிராவிடர் நலக்குழு மாநில இணைச் செயலாளர்கள் வி.பி.இராஜன், திப்பம்பட்டி ஆறுச்சாமி மற்றும் ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் அரூர் சா.இராஜேந்திரன் ஆகியோர் கருத்துரையாற்றுகிறார்கள்.

ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரும், ஆதிதிராவிடர் நலக்குழு துணைத் தலைவருமான மா.மதிவேந்தன், தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர் பி. பழனியப்பன், தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆ.மணி எம்.பி., கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் தே.மதியழகன், எம்.எல்.ஏ., கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ., திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் க.தேவராஜ், எம்.எல்.ஏ., மற்றும் ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.

இக்கருத்தரங்கு கூட்டத்தில் மண்டல அளவிலான தருமபுரி மேற்கு, கிழக்கு, கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு, திருப்பத்தூர், நாமக்கல் கிழக்கு, மேற்கு, ஈரோடு வடக்கு, தெற்கு, மத்திய ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட, மாநகர தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் தெற்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் கூட்டத்தில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் மீன் வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். உடன் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் சஃபி சுலைமான், மாவட்ட துணைச் செயலாளர் ஜெயக்குமார் ரூபன், ஆறுமுக பெருமாள், ஜெபதங்கம் பிரேமா, தலைமை செயற்குழு உறுப்பினர் அ.பிரம்மசக்தி, ஒட்டப்பிடாரம் இளைஞரணி துணை அமைப்பாளர் தங்கதுறை பாண்டியன், ஒன்றிய செயலாளர்கள் ஜெயக்கொடி, ஏ.பி.ரமேஷ், டி.பி.பாலசிங், நவீன் குமார், இலங்கோ மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.06.2025) மகளிர் சுய உதவிக்குழு தினத்தை முன்னிட்டு சென்னையில் இருந்து காணொலி காட்சி வாயிலாக மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு வழங்கி துவக்கி வைத்தார்கள்.அதனைத் தொடர்ந்து நெல்லை மாவட்டம் பாளையங் கோட்டை நேருஜி கலையரங்கில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி கடன்கள் வழங்கும் நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ், மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.